# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாம் தவணைப்பரீட்சை - 2018

| தரம் -07 | சைவ சமயம் | நேரம் : 2 மணித்தியாலம் |
|---|---|---|

### பகுதி I

❖ மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

1) முதல் வணக்கத்திற்குரியவர்.
   1. சிவபெருமான் 2. சூரியன் 3. ஆனைமுகன் 4. உமையம்மை

2) திருமுறைகள் கிடைக்கப்பெற்ற இடம்
   1. சிதம்பரம் 2. தில்லை 3. கோயில் 4. மூன்றும் சரி

3) "இனி நாம் ஐவரானோம்" என்று கூறியவர்
   1. குகன் 2. சுக்கிரன் 3. இராமன் 4. கர்ணன்

4) "மாலும் அயனும் காணாத நீதியே" எனக் குறிப்பிட்டவர்
   1. கச்சியப்பர் 2. மாணிக்கவாசகர் 3. ஏகநாதர் 4. கும்பகர்ணன்

5) இறைபக்தியுடன் கலைகளை அதிகம் வளர்க்கும் விழா
   1. நவராத்திரி 2. புதுவருடப்பிறப்பு 3. தீபாவளி 4. தைப்பொங்கல்

6) மன உறுதியைத் தருவது
   1. சத்துணவு 2. உடை 3. நிமிர்வு 4. பணிவு

7) நவராத்திரியின் போது விசேடமாக இடம் பெறுவது.
   1. பூமாலை சாத்துதல் 2. திருமுறை ஓதுதல்
   3. கொலு வைத்தல் 4. சரியைத் தொண்டு செய்தல்

8) தாய்ப்பசு தன் கொம்புகளால் அசைத்த மணி
   1. ஆராய்ச்சி மணி 2. நீதிமணி
   3. காண்டாமணி 4. செய்தி மணி

9) "மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்" என்பது
   1. கந்த புராணம் 2. சிவபுராணம்
   3. பெரிய புராணம் 4. திருவிளையாடற் புராணம்



kalvi.lk

10) திருஞான சம்மந்த மூர்த்தி நாயனாரின் அற்புதங்களால் கவரப்பட்டு சைவத்திற்கு மாறிய மன்னன்

1. குலச்சிறையார்
2. நின்றசீர் நெடுமாறன்
3. இராஜராஜ சோழன்
4. அநபாயச் சோழன்

11) "விருது குன்றமா மேரு வில்" எனும் தேவாரம் அமைந்த திருமுறை

1. ஒன்று 2. இரண்டு 3. மூன்று 4. நான்கு

12) கூன் பாண்டியனின் மனைவி

1. காரைக்கால் அம்மையார்
2. மங்கையற்கரசி
3. இசைஞானியார்
4. சிவஞானவதியார்

13) வீட்டைச் சுற்றி எத்தனை திக்குகளில் சங்குகள் பதித்துக் காவல் செய்யப்படும்

1. நான்கு 2. எட்டு 3. ஆறு 4. ஒன்பது

14) வானரகுலத் தலைவன்

1.குகன் 2.வாலி 3. சுக்ரீவன் 4. அனுமன்

15) கோதாவரி நதியில் 108 முறை நீராடியவர்

1. வீதி விடங்கன் 2. ஏகநாதர் 3. கச்சியப்பர் 4. கும்பகர்ணன்

16) கிருஹப்பிரவேசம் என்பது

1. வீடு கட்டுதல்
2. அத்திபாரம் இடல்
3. குடி புகுதல்
4. விருந்து கொடுத்தல்

17) பாடசாலையில் நிகழும் ஆரம்ப நிகழ்வு

1. பிராத்தனை 2. நற்சிந்தனை 3. பாடம் படித்தல் 4. உடற் பயிற்சி

18) திருநாவுக்கரசர் கைலைக்காட்சியைக் கண்ட இடம்

1. பொன்முகலி ஆறு
2. மாயவனாறு
3. திருவையாறு
4. வைகையாறு

19) புதுமனை புகு விழாவின் போது சிவாச்சாரியரால் நிகழ்த்தப்படுவது

1. கிராமசாந்தி 2. கிருஹசாந்தி 3. ஆத்மசாந்தி 4. வாஸ்து சாந்தி

20) பொறுமைக்குச் சிறந்த உதாரணமாகத் திகழ்ந்தவன்

1. அர்ச்சுணன் 2. கர்ணன் 3. தர்மன் 4. நகுலன்

(20X 2= 40 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி II

❖ முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

1) பின்வரும் பாடல்களுள் இரண்டினை அருளியவர் ,தலம் என்பவற்றைக் குறிப்பிட்டு வரிக்கிரமமாகப் பிழையின்றி எழுதுக.

I. "விருது குன்றமா மேருவில்"
II. "நிரைகழல் அரவம்"
III. " மாதர்ப்பிறைக் கண்ணியானை"
IV. "நங்கடம்பனை பெற்றவள் பங்கினன்"

(8+1+1x2=20புள்ளிகள்)

2) "தவமும் தவம் உடையார்க்கு ஆகும்".

I. மூதாட்டியும் மூதாட்டியின் மகளும் செய்த தவப்பயனால் பெற்ற பேறு யாது? (2 புள்ளிகள்)
II. மூதாட்டி வீடு திரும்ப முடியாமைக்குரிய காரணம் யாது? (2 புள்ளிகள்)
III. மூதாட்டி செய்த சரியைத் தொண்டு யாது? (2 புள்ளிகள்)
IV. கடவுள் ஒருவரே எமக்கு என்றும் துணையாக இருப்பவர் என்பதற்குரிய முதுமொழிகள் எவை? (2 புள்ளிகள்)
V. இறைவன் உயிர்களுக்கு அருள் புரிந்த வேறு சந்தர்ப்பங்கள் இரண்டு தருக? (2 புள்ளிகள்)

(10 புள்ளிகள்)

3) "சமய அறிவையும் மனித விழுமியப் பண்புகளையும் கற்றுக் கொடுக்கும் இடம் பாடசாலையாகும்"

I. பாடசாலையில இடம்பெறும் சைவசமய விழாக்கள் நான்கினைத் தருக? (2 புள்ளிகள்)
II. சைவ சமய அறிவை வளர்க்கவும், இறைபக்தியை ஏற்படுத்தவும் நடாத்தப்படும் போட்டிகள் நான்கு தருக? (2 புள்ளிகள்)
III. பஞ்ச புராண ஒழுங்கினைத் தருக? (2 புள்ளிகள்)
IV. பாடசாலைக்கு நாம் எவ்வாறு சமூகமளிக்க வேண்டும்? (2 புள்ளிகள்)
V. பாடசாலையில் கொண்டாடிய சமய விழாக்களின் போது நீர் செய்த சைவத் தொண்டு யாது? (2 புள்ளிகள்)

(10 புள்ளிகள்)

4) "கல்வியின் நிறைவு ஒழுக்கம் பண்புடையார் பட்டுண்டு உலகம் "

I. எமது வாழ்வில் போற்றி வளர்க்க வேண்டிய பெறுமதிமிக்க நற்பண்புகள் எவை? (2 புள்ளிகள்)
II. இராஜகுமாரன் தன் தந்தையான அரசனைப் பார்த்துக் கூறியவற்றைத் தருக? (2 புள்ளிகள்)
III. ஆச்சிரமத்தில் தங்கி , பல பணிவிடைகளைச் செய்து கற்கும் கல்வியை எவ்வாறு அழைப்பர்? (2 புள்ளிகள்)
IV. நன்றி மறவாமை உணர்த்தும் கூற்றுக்கள் எவை? (4 புள்ளிகள்)

(10 புள்ளிகள்)



kalvi.lk

5) "அறம் வளர்வது மனையில் இல்லறம் அல்லது நல்லறம் அன்று"

I. வீடொன்றைக் கட்டும் விதிகளைக் கூறும் நூல் யாது? (2 புள்ளிகள்)

II. வீடு கட்டும் போது, அத்திபாரத்தில் இடப்படும் பொருட்கள் எவை?

III. வாஸ்து பூசையின் நோக்கம் யாது? (2 புள்ளிகள்)

IV. க்ருஹப் பிரவேசத்தின் போது கோயிலில் இருந்து வீட்டிற்கு கொண்டு செல்லப்படும் மங்கலப் பொருட்கள் எவை? (4 புள்ளிகள்)

(10 புள்ளிகள்)

6) பின்வருவவற்றுள் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக

I. கடவுள்

II. பாடசாலையில் ஒழுக்கம்

III. நன்றி மறவாமை

IV. திருமுறை

(5x2=10 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk




Education கல்வி අධ්‍යාපන

KALVI.LK

WHATSAPP

075 287 1457